# தமிழீழத்தில்

செய்திப் பத்திரிகை

செப்டம்பர் 1985 ஊக்குவிப்பு 1-

# கிழக்கில் விடுதலைப் போராளிகளின் வெற்றி!

**கிழக்கு மாகாணமான மட்டக்களப்பு, திருகோணமலை பிராந்தியங்களில் விடுதலைப் போராளிகள் மிகப் பெரிய வெற்றிகளை ஈட்டி வருகின்றனர் தமிழீழ விடுதலைப் போராட்டம் கிழக்கிற்கும் பரவலாக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு கிழக்கு மாகாணங்களும் விடுதலைப் போராளிகளின் கட்டுப் பாட்டிற்குள் படிப் படியாக கொண்டு வரப்படுகின்றது. உண்மை இவ் விதமிருக்க உண்மைக்கு மாறுன செய்திகள் சிறிலங்கா அரசின் பிரச்சார சாதனங்களால் வெளியுலகிற்கு அறிவிக்கப்படுகின்றன.**

## ஏருவூர் பொலிஸ் நிலைய தகர்ப்பு.

2-9-85 அன்று ஏருவூர் பொலிஸ் நிலையத்தை தாக்க 50 ற்கும் மேற்பட்ட விடுதலைப் போராளிகளின் அதிரடிப்பிரிவு ஒன்று மிக நுணுக்கமாக திட்ட மிட்டது.

சமீப காலமாக கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் போராளிகளின் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டதை தொடர்ந்து ஏருவூர் பொலிஸ் நிலையம் இஸ்ரேலிய மொசாட்டினுல் பயிற்சி பெற்ற கொமாண்டோக்களினுல் மிகப் பாதுகாப்பாக பலப்படுத்தப்பட்டது.

( 4ம் பக்கம் பார்க்க )

## தமிழீழத் தினசரிகளுக்கு ஓர் பகிரங்க வேண்டுகோள்!

சிறிலங்கா அரசு திட்டமிட்ட ரீதியில் தனது பிரச்சார சாதனங்களால் பொய்ச் செய்திகளையும் விடுதலைப் போராட்டத்திற்கு மாருக உண்மைச் செய்திகளை திரித்தும் பிரச்சாரம் செய்து வருகின்றது. இதே செய்திகளுக்கு அப்படியே முக்கியத்துவம் கொடுத்து நம் ஊர் தினசரிகளும் வெளியிடுகின்றன. நம் ஊர்ப் பத்திரிகைகளின் இத்தகைய போக்கு மக்களை பிழையான வழிக்கு திசைப் படுத்துகின்றது. மக்களுக்கு விடுதலையுணர்வை ஊட்டுவதற்கு பதில் மாயையில் மயக்க நிலையில் வைத்திருக்கின்றது. ஒட்டு மொத்தத்தில் ஓர் எதிர் புரட்சிகர சூழ் நிலையை உருவாக்குகின்றது.

ஓர் விடுதலைப் போர் புரட்சி நடந்து கொண்டிருக்கின்ற நாட்டுப் பத்திரிகைகள் தெளிவான கருத்தையும் விடுதலைக்கு ஆதரவான விடுதலைப் போராட்டத்தை வளர்க்கக் கூடிய விதமான செய்திகளையும் வெளியிட வேண்டும். நமது நிலையில் விடுதலைக்கு ஆதரவான செய்திகளை நம் ஊர் தினசரிகள் வெளியிடா விட்டாலும் எதிராக செயற்படுதல் உடன் நிறுத்தப்பட வேண்டும்.


இப்பத்திரிகைகளின் ஆழம் உண்மையான சோசலிச தமிழீழத்திற்கு எதிரானதாக வேயுள்ளது.

எமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன. இன ரீதியில் நாம் ஒடுக்கப்பட்டோம். இதற்காகவே தமிழினம் தமிழீழத்தை நோக்கி போராடுகின்றது. ஆயிரக் கணக்கான உயிர்களை தியாகம் செய்தது. பேச்சு வார்த்தைக் கல்ல, சில சில சலுகைகளுக் கல்ல.

இடைக்காலத் தீர்வு மாவட்ட சபை மாகாண சபை மாநிலசபை எம் பத்திரிகைகளின் தாரக மந்திரமே இவைகள் தான். இவைகளில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட வைப்பது விடுதலை உணர்வையே மழுங்கடிக்கின்றது.

மேலும் சிறிலங்கா அரசின் பிரச்சார சாதனங்களின் செய்திகளுக்கு அப்படியே முக்கியத்துவம் கொடுத்து

( 3ம் பக்கம் பார்க்க )




குரங்கு பூனைகளுக்கு அப்பம் பிரித்த - அதே கதைதான்

சரணடைந்த **J. R.** இன் வீணீர்!

வற்புறுத்தப்பட்ட போராளிகளின் கண்ணீர்!!

ஆக்கிரமிக்கும் ரஜீவின் சூழ்ச்சி!!!

**தமிழீழ, தமிழக தமிழ் பேசும் மக்களின் ஒன்று திரண்ட சக்தி இவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கும்**

# தமிழீழக் குரல்

திம்பு பேச்சு வார்த்தை தோல்வியில் முடிவடைந்திருக்கின்றது. கொலை வெறியனை கதிரையில் இருத்தி "நீங்கள் தயவுசெய்து இப்படியெல்லாம் செய்யக்கூடாது" என்று சொன்னால் அவன் கேட்பானா?

பேச்சு வார்த்தை யுத்த நிறுத்தத்தில் ஒரு கரையாக அப்பாவி தமிழ் பேசும் மக்களுக்கெதிரான தொடங்கப்பட்டபோர்தொடர்கிறது.சிறிலங்கா அரச இராணுவத்தை பலம்பெற வைத்து ஆயிரக் கணக்கில் எம்மக்களை கொல்ல வைத்ததே யுத்த நிறுத்தம் பேச்சு வார்த்தைகள் கண்ட தீர்வுகள்.

இன் ஒதுக்க கொள்கை நீடிக்கும் தென்னாபிரிக்காவுடன் உலகநாடுகள் விளையாட்டில் ஈடுபடுவதில்லை. ஆனால் சிறிலங்காவில் இன ஒதுக்கலில்லை! இன அடக்கு முறையில்லை!! இனப்படு கொலையில்லை!!! சிறிலங்கா இந்திய மத்திய அரசிடம் சரணடைந்த பின் இந்தியமத்திய அரசின் தீர்க்கமான முடிவு இது.

"எல்லோருமாச் சேர்ந்து எங்களுக்கு (கிரிக்கெட்) விளையாட்டு காட்டுறாங்கள்"

இலங்கை தமிழர்பிரச்சனையில் ரஜீவுக்கு என்ன பரிவு! என்ன பாசம்!!

"பாலசிங்கம், சத்தியேந்திர சந்திரகாசன் நாடு கடத்தப்பட்டனர்"

இந்திய மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்கி வாய்கிழிய கத்தியவர்கள் வாயடைத்தனர். ஏகாதிபத்தியங்களுக்கு துணைபோகும் ரஜீவ் தன் முக விலாசத்தை கண்ணாடியில் பார்த்து தெரிந்து கொள்ளட்டும்.

ஆனால் தமிழக மக்கள் கொண்டுள்ள இன உணர்வு 'தானாட மறந்தாலும் தசையாடும்''

தமிழ் நாட்டின் எழுச்சிகள் சந்திரகாசனை திரும்பி அழைத்தது. ஏனையோரை திருப்பி அழைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றது.

ஆனால் தமிழீழ மக்களில் காணப்படும் ஓர் சில சந்தர்ப்பவாதிகள்.

ஒருபக்கம் தமிழீழம்தான் இறுதிமுடிவு என்பதும் மறுபக்கத்தில் ஒருசில சந்தர்ப்பவாதிகள் இந்திய மத்திய அரசின் சதிவலைக்குள் வீழ்ந்து வெறும் பதவிக்காக அதிகாரத்திற்காக இடைக்கால தீர்வை ஏற்று மாகாணசபை மாநில சபை எனக் கதைப்பதும் தமிழீழ விடுதலைபோராட்டத்தை மழுங்கடிக்கும் செயலாகவே அமைகின்றது.

இந்த சந்தர்ப்ப வாதிகளுக்கு தமிழீழ மக்களின் சார்பில்...

தமிழீழம் தவிர்ந்த வேறெந்த தீர்வுக்கும் உடன்பாடு எமக்கில்லை. உங்கள் இனத்திற்காக எதிர்கால தலைமுறைகளுக்காக முழுத் தமிழினமுமே ஈடுபடும். இப்போராட்டத்தை மழுங்கடித்து விடாதீர்கள். ஆயிரக்கணக்கான உயிர்கள் முழுநேரமாய் ஈடுபடும்போராட்டம் இது வெறும் அதிகாரத்திற்காக இதை மழுங்கடிக்கும் முயற்சிகளை கைவிட்டு தமிழீழத்திற்காக பாடுபடுவர்களுடன் இணையுங்கள்.

மேலும் ஓர்விவாதம் முன் வைக்கப்படுகின்றது. "இந்தியாவின் ஒத்துழைப்பு உதவி இல்லாமல் தமிழீழம் பெறமுடியுமா என்பது இதற்கு ஓர் படிமேலே இந்தியாவின் அங்கீகாரமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இன்றியமையாதது. இது அனைவரும் புரிந்துகொண்ட உண்மை.

அதற்காக இந்திய அரசின் காலடியில் வீழ்ந்தால் இந்திய மத்திய அரசுஅதன் நலத்தை பேண தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கவே முற்படும். ஆனால் நாம் தமிழீழ, தமிழக, தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டு ஒரே சக்தியாய் இருப்பின் அச்சக்திக்கு இந்திய அரசு கட்டுப்பட்டே ஆகவேண்டும்.

தமிழகமக்களின் சக்திக்கு மிகச்சிறந்த உதாரணம் நாடு கடத்தப் பட்டவர்கள் திரும்பி அழைக்கப்பட்டமைஅதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றமை.

இதே போன்றே தமிழீழ விடுதலைப்போராட்டஉதவிகள் போராளிகளை தேடி இந்திய மத்திய அரசே உதவியது.

எனவே எமது ஒன்று திரண்ட சக்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்தும்;இந்திய அரசு கட்டாயமாக எமது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளும்.

# அடாவடித் தனங்களில் இறங்குவோர்க்கு மக்களின் ஓர் எச்சரிக்கை!

இன்றைய கால கட்டத்தில் சில சக்திகளின் தொடர்ச்சியான செயற்பாடுகள் தமிழீழ மக்களை வேதனையிலும் விரக்தியிலும் ஆழ்த்தி வருவனவாய் அமைந்திருக்கின்றன. குறிப்பாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எதுவித பங்கும் வகிக்காத ஒருசில சிறு குழுக்களின் அடாவடித்தனமும் அட்டூழியங்களும் எல்லை மீறுவனவாய் அமைந்து வருகின்றன.

ஓர் சிறு குழுவினராயிருந்து கொண்டு கொள்ளையடிப்பதும் வாகனங்கள் கடத்துவதும் மக்களுக்கு எதிராக செயற்படுவதுமே இவர்களின் போராட்ட முன்னெடுப்புகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இடையிடையே சுவரொட்டி ஒட்டுவதும் இவர்களின் முக்கியமான பங்களிப்பில் ஒன்றே.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தீவிர வளர்ச்சியடைந்துவந்த காலகட்டத்தில் பல்வேறு குழுக்கள் பல்வேறிடங்களில் தோன்றின. காலரீதியில் எதிரியின் அடக்குமுறையின் மத்தியில் இவை நலிந்து சிதைவடைந்தன. இன்று மறுபடியும் களத்தில் நின்று போராடிய விடுதலை இயக்கங்கள் ஏற்படுத்திய போர்நிறுத்த சூழ்நிலையில் மீண்டும் துளிர்விட ஆரம்பிக்கின்றன. அதனோடு தமது வழமையான வேலைத்திட்டங்களையும் செய்யத் தொடகுங்கின்றன. தொடர்ச்சியான போராட்டம் விடுதலை இயக்கங்களை ஒழுங்கமைவாக்கி இருக்கும். ஆனால்போர்நிறுத்த சூழ்நிலை ஓர் போராட்ட பின்னடைவே.

இதேநேரம் மக்களை விரோதிக்கின்ற செயற்பாடுகள் ஒருசில விடுதலை இயக்கங்களில் காணப்படுவது வேதனைக்குரியதே. ஆனால் எதிரியின் அடக்குமுறையில் களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கையில் இவையனைத்தும் ஒழுங்கமைவில் வருவது தவிர்க்கமுடியாதே.

பல்வேறு கொள்கைகள் வேறுபாடுகள் முரண்பாடுகள் உள்ள நான்கு இயக்கங்கள் போராட்டக் களத்தில் ஒன்றிணைந்தமை இதற்கு மிகச் சிறந்த சான்றாகும்.

விடுதலை இயக்கங்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது மக்களை எதிரியின் அடக்கு ஒடுக்கு முறையிலிருந்து காப்பதற்கே. மக்களின் சுதந்திரமான சுபீட்சமான வாழ்விற்குவழிவகுப்பதற்கே. அதே நேரம் மக்களுக்கெதிராக அடாவடித்தனங்களில் இறங்குவோர் ஓர் ஒதுக்கப்பட வேண்டிய கும்பலே.

மக்களுக்கு எதிராகசெயற்பட்டு மக்களை விரோதித்த ஓர் கொள்ளை கும்பலான E.R.C.P என்ற சிறு கும்பல் ஓர் விடுதலை இயக்கத்தினால் தடைசெய்யப்பட்டது, ஏனைய தான்தோன்றித் தனமான சிறு கும்பல்களுக்கு ர் எச்சரிக்கையாக உள்ளது

தமிழ் மக்களாகிய நாம் இத்தகைய செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடும் சிறு குழுக்களையும், சக்திகளையும் எச்சரிக்கிறோம்.

மக்களுக்கு எதிராக செயற்பட்டு மக்களின் ஆதரவற்ற சூழ்நிலையில் நீங்களெல்லாம் நலிந்து சிதைவது திண்ணம். சிறு சிறு குழுக்களாக தொடர்ந்து செயற்படுவதை உடன் நிறுத்துங்கள். ஏதாவது ஒரு பொறுப்பு வாய்ந்த விடுதலை இயக்கத்தின்கீழ் உங்களை அணி திரட்டிக் கொள்ளுங்கள். தொடர்ந்து அடாவடித் தனங்களில் இறங்குவது உங்களின் நிச்சயமான அழிவுக்கு வழி வகுக்கும். உங்களை மாற்றி ஓர் விடுதலைப் போராளியாகுங்கள்.

# குள்ள நரியின் சாயம் வெளித்தது

இந்திய மத்திய அரசாங்கத்தின்முகத்தில்நீடித்திருந்த புன்னகை மறைந்து கொடிய சொருபங்களின் ரேகைகளை இன்று காணக்கூடியதாயுள்ளது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இந்த நிகழ்வு திடீரென ஓர் திகைப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அரசியல் அவதானிகள் தெளிவாக புரிந்து கொண்ட உண்மை ''முன்பிருந்தது கூட புன்னகை அல்ல'' என்பதே.

இந்திய மத்திய அரசாங்கம் போராளிகளுக்கெதிராக எடுத்த முதல் வெளிப்படையான நடவடிக்கையான போராளிகள் நாடுகடத்தல் சகலருக்குமே இந்திய மத்திய அரசை பற்றிய தெளிவை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்திய மத்திய அரசாங்கத்தின் சுயரூபம் மிக விரைவில் அம்பலமானது. தமிழீழப் போராட்டத்தை தெளிவான பாதைக்கு இட்டுச்செல்ல மிக உறுதுணையாயிருக்கின்றது.

சமீபகாலத்தின் முன் கூட சில விடுதலை இயக்க தலைவர்களின் அறிக்கைகள் ''இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலையை பெற்றுத் தரும்'' எனும் போக்கிலேயே அமைந்திருந்தன. ஓர் குறிப்பிட்ட விடுதலை இயக்க தலைவரின் சமீபகால அறிக்கையில் ''இந்திய மந்திய அரசு எமக்கு புகலிடம் அளித்திருக்கின்றது. எமக்கு இன்னோரன்ன உதவிகளை செய்திருக்கின்றது. அப்படியாயின் ஏன் இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு எதிராயிருக்க வேண்டும்'' என நியாயித்திருந்தார்.

இந்தியாவின் நலன்களுக்கு சோசலிச தமிழீழ விடுதலைப் போராட்டம் எதிராயிருக்க பல்வேறு காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன.

காரணங்களை அடுத்த ''தமிழீழத்தில்'' விரிவாக ஆராய்வோம். இந்த சூழ்நிலையில் இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க தன்னாலான முயற்சிகளை செய்து வருகின்றது.

இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலைப் போராளிகளை தனது நலன்களுக்காக பாவிக்கின்றது. என்பதை இன்று சகலரும் உணர்ந்துள்ளனர். சீக்கிய பிரச்சனையில் லோங்கோவாலுக்கெதிராக ஆயுதம் தாங்கிய இயக்கமாக பிந்தரன் வாலேயை வளர்த்தது, இந்திய மத்திய அரசாங்கமே. பிந்தரன் வாலேக்கு பயிற்சி முதல் ஆயுதங்களை வழங்கியது குறிப்பிடத்தக்கது. தனது நலன் பேணப் பட்டவுடன் பொற்கோயிலை தாக்கி பிந்தரன் வாலேயே சுட்டுக் கொன்றதும் இந்திய மத்திய அரசே.

எமது விடுதலைப்போராட்டத்தை பொறுத்தவரை தமிழீழம் அமைய வேண்டியது வரலாற்று நியதி தமிழீழ தமிழக தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஓரணியில் தமிழீழத்தில் உறுதியாக நின்றால் தமிழீழம் அமைவதை யாராலும் தடுத்துவிட முடியாது. பாலசிங்கம், சத்தியேந்திரா சந்திரகாசன் நாடுகடத்தப்பட்டதில் தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி சந்திரகாசனை திரும்பவும் அனுமதியளிக்க வேண்டிய நிலைக்கு இந்திய மத்திய அரசை தள்ளியிருக்கின்றது. ஏனையோரையும் திருப்பி அழைக்கும முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த விடயத்தில் ரஜீவின் தோல்வி வெளிப்படையாகியுள்ளது ஆனால் சில சந்தர்ப்பவாதிகளும் அதிகார ஆசை பிடித்தவர்களும் எம்மத்தியில் இருப்பதே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரிய தடைக் கற்களாய் உள்ளன.

இவர்களுக்கு தமிழீழ மக்களாகிய எமதுவேண்டுகோள் இதுதான். தமிழீழ போராட்டத்திற்காக பலியாகிய உயிர்கள் ஏராளம், இன்று ஏற்படும் சில சலுகைகள் தமிழீழத்தை முற்றாக தடைப்படுத்தி எமதுஇனத்தின் எமது தலைமுறைகளின் நிரந்தர அடக்கு முறைக்கு அழிவுக்கு வழி வகுக்கும். வெளிப்படையான இவ் உண்மைகளை உங்கள் பதவிக்காக, அதிகாரத்திற்காக பலியிடாதீர்கள், தமிழீழம் தான் இறுதி முடிவு என்பதில் உறுதியாய் நில்லுங்கள். நாம் ஒன்றுபட்டு தமிழீழத்தை வென்றெடுப்போம்.

# போராட்டத்தில் எமது பங்களிப்பு

சுதந்திரம் என்பது மனிதத்தின் சாரம், மனித ஆன்மாவின் கீதம், மனித வரலாற்றின் உந்துவிசை, மனிதன் ஒவ்வொருவரினதும் பிறப்புரிமை.

ஆதியிலிருந்தேசுதந்திரத்தையடைய மனிதர்கள் போராடி வந்திருக்கிறார்கள். புரட்சி செய்து வந்திருக்கிறார்கள்; மனிதர்கள் பரிபூரண சுதந்திரம் அடையும் வரை போராட்டங்களும் புரட்சிகளும் ஓய்ந்து விடப்போவதில்லை.

சுதந்திரம் என்பது உயிருக்கு மேலான உன்னதப் பொருள். சுதந்திரத்தின் சுகந்தத்தை அனுபவிக்க மக்கள் நடாத்திய நடாத்திக்கொண்டிருக்கின்ற சுதந்திரப் போராட்டங்களும் புரட்சிகளும் கணக்கற்றவை.

ஓர் நாட்டின் சுதந்திரம் அந்தநாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் இரத்தத்தாலேயே எழுதப்படுகின்றது. அந்நாட்டு மக்கள் அனைவரினதும் தீரமும் தியாகமும் நிறைந்த போராட்டமே எதிர்கால தலைமுறைகளில் சுதந்திர சுபீட்ச வாழ்வுக்கு வழி வகுத்திருக்கின்றது.

ஆம்! மக்கள் அனைவரினதும் சிறு குழந்தைகள் முதல் வயது முதிர்ந்த பாட்டிவரை அனைவரினதும் பங்களிப்புடனேயே சுதந்திரப் போராட்டம் வென்றடைய முடியும். "மக்கள் அனைவரினதும் பங்களிப்பு! பங்களிப்பு! என்று பேசப்படுகிறதே. நாம் வயதானகாலத்தில் விடுதலைக்கு என்ன செய்வது'' என்று நீங்கள் முணுமுணுப்பது எம்காதுகளில் விழவே செய்கிறது.

ஆனால் தமிழீழ மக்களாகிய நாம் அனைவரும் இன்றே ஓர் பிரகடனம் செய்வோம் ''தமிழீழமே எம் இறுதி இலட்சியம்! இறுதிமுடிவு எத்துணை தியாகங்கள் புரிந்தும் இதை நோக்கி போராடுவோம். தமிழீழம் தவிர்ந்த வேறெந்த தீர்வுக்கும் நாம் உடன்படோம்.

அதற்காக சகலவழிகளிலும் உழைப்போம். ஓர் பயனுள்ள உணவுப் பயிர்களை வீட்டுத்தோட்டத்தின் மூலம் நடுதல் கூட தமிழீழ பங்களிப்பில் ஓர் அங்கந்தான்.

இன்றைய காலகட்டத்தில் சில சக்திகளின் செயற்பாடுகள் எமக்கு விரக்தியை தரலாம். ஆனால் எதிரியுடனை மிகக் கடுமையான போராட்டம் போராட்டக் களத்தில் போராடுவோரை சரியான வழிக்கு திசைப்படுத்தும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. மிகச்சிரமத்தின் மத்தியில் சொல்லொணா இழப்பின் மத்தியில் தாங்கொணாத் துயரத்தின் மத்தியில் பெறப்படும் சுதந்திரம் ஓர் உண்மையான மக்கள் விடுதலையை பிரசவிக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

# தமிழீழத் தினசரி...

[1ம் பக்கம் தொடர்ச்சி]

செய்தி வெளியிடும் போக்கையும் இவை உடன் கைவிட வேண்டும். உதாரணமாக திருகோணமலையில் பயங்கரவாதிகளின் முகாம் முற்றாக தாக்கப்பட்டது - லங்கா புவத்தின் செய்தி அடுத்தநாள் ஈழமுரசின் தலைப்பு செய்தி திருகோணமலையில் தீவிரவாதிகளின்முகாம் முற்றாக தாக்கப்பட்டது. இதில் ஒரு வீதம் கூட உண்மையில்லை. ஆனால் உண்மையின் பிறப்பிடம் லங்கா புவத்தின் செய்தி ஈழமுரசில் பயங்கரவாதி தீவிரவாதியாக்கப்பட்ட ஓரே மாற்றத்துடன் தலைப்பு செய்தியாக வெளியிடப் படுதல் மக்களை அவ நம்பிக்கை கொள்ளவே செய்யும். மேலும் ஒடுக்கு முறைக்கெதிராக போராடும் தமிழீழ மக்கள் தீவிரவாதிகளல்ல. விடுதலைப் போராளிகள்.

இன்று இந்திய அரசின் உண்மை நிலை வெட்டவெளிச்சமாகிவிட்டது. பாலசிங்கம் சத்தியேந்திரா நாடுகடத்தலை தொடர்ந்து இந்திய அரசு விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக செயற்படுகிறது என்பது நிரூபணமாகிவிட்டது. இதே போன்றே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவெளிப்படையாகசெயற்படும் சக்திகளுக்கு ஆதரவாக செய்தி வெளியிடுதலும் தவறானதே.

நெருக்கடி நேரத்தில் நம் நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளின் பிரச்சனைகளையும் நாம் உணர்கிறோம். ஆனால் உண்மையான மக்கள் விடுதலைக்கு பணியாற்ற வேண்டியது அவர்களின் கடமையே எனவே மக்களை தமிழீழ விடுதலைப் பாதை நோக்கி கொண்டு செல்ல வேண்டிய எமது பத்திரிகைகளே. அவர்கள் அதைச் செய்வார்கள் என்றே நாம் நம்புகிறோம்.

# இராணுவத்திற் கெதிரான தொடர்ச்சியான வெற்றிகரத் தாக்குதல்கள்

தமிழீழ விடுதலை போராளிகளின் தீரமும் தியாகமும் நிறைந்த போராட்டமே போர்நிறுத்த சூழ்நிலையை தோற்றுவித்தது. போராட்டம் நடைபெற்றதாலேயே எதிரி அடி பணிந்தான். விடுதலைப் போராளிகளின் கட்டுப் பாட்டில் வடபகுதியிருப்பது தொடர்ச்சியான போராட்டத்தினாலேயே.

தீரத்தனமிக்க தாக்குதல்களில் விடுதலை இயக்கங்கள் பறிகொடுத்த போராளிகளின் எண்ணிக்கை கணக் கற்றவை. தம் உயிரை துச்சமாக மதித்த போராளிகளின் வீரம்செறிந்த தாக்குதல்களாலேயே தமிழீழத்திற்கான பாதைகள் திறக்கப்பட்டன. இதே நேரத்தில் எதுவித போராட்டமுமே நிகழ்த்தாமல் வீண் கற்பனைக் கதைகள் பேசி களத்தில் நின்று போராடிய விடுதலை இயக்கங்கள் ஏற்படுத்திய போர்நிறுத்த சூழ்நிலையிலும் பேச்சுவார்த் தையிலும் குளிர்காய்ந்து இடைக்கால தீர்வை அங்கீகரித்து தமிழீழத்திற்கு எதிராக செயற்படுவோரை எண்ணும் போது வேதனையும் விரக்தியுமதா[illegible] திருசுகின்றது.

10-8-85 இல் வவுனியா பொலிஸ் கொமாண்டோக்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் நடைபெற்ற தாக்குதலில் ஒரு பொலிஸ் சுப்பிரின்டன் உட்பட அறுவர் மரணமானுர்கள். இறந்தவர்களின் மிக நவீன தன்னியக்க துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

18-8-85 இல் வாகரையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத் தொடர் மீதான தாக்குதலில் இரு இராணுவ ஜீப் வண்டிகள் முற்ருக சேதமடைந்தன. இதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், ஏனையோர் படுகாயமுற்றனர் பல ஆயுதங்கள், வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டன.

22-8-85 இல் மன்னுர்-மதவாச்சி பாதையில் ரோந்து சென்ற இராணுவத் தொடர் மீதான தாக்குதலில் ஜீப் வண்டி தூள் தூளாகியது. ஜீப் வண்டியிலிருந்த 6 இராணுவத்தினர் மாண்டனர். ஆயுதங்கள் அனைத்தும் தூள் தூளாகியது.

23-8-85 இல் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் அதிரடிப் படையினர் மீதான தாக்குதலில் ஒரு ஜீப் வண்டி முற்ருக சேதமடைந்தது. 8 பொலிஸ் கொமாண்டோக்கள் ஸ்தலத்திலேயே மாண்[illegible] ஆயு[illegible]ள் சேதமடைந்தன, ஆனுல் கைக் குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

[illegible] இல் திருகோணமலை மாவட்டத்தில் பாலம் போட்டாற்றில ஒரு ஜீப் ஒரு ட்ரக் வண்டிகளில் ரோந்து ந[illegible] போது இத் தொடர் மீதான தாக்குதலில் ஒரு ஜீப் வண்டி கண்ணி வெடிக்குள்ளாகி முற்ருக சேத[illegible] உட்பட 8 இராணுவத்தினரின் தலைகளை ஜீப்பில் காணக கூடியதாயிருந்தது. பின்னுல் வந்த ட்ரக் மீதான தாக்குதலில் [illegible]லத்த சேதத்துக்குள்ளான ட்ரக் தப்பி ஓடியது. ஜீப் வண்டி மீதான தாக்குதலில் சேதமடையாதிருந்த ஒரு சில ஆயுதங்கள் போராளிகளால் கைப்பற்றப்பட்டன.

4-9-85 இல் கிண்ணியாவில் ரோந்து நடவடிக்கையிலீடுபட்ட இராணுவ வாகனங்களின் முன்னுல் நடந்து வந்த இராணுவத்தினர் கண்ணி வெடிக்குள்ளானதில் ஒரு சிங்கள மதகுரு உட்பட 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த பௌத்த பிக்கு இராணுவத்தினருக்கு வழிகாட்டியாக வந்தவராம். ஏராளமான துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டன. துப்பாக்கிகள் யாவும் கண்ணி வெடிக்குள்ளானதில் முற்ருக சேதமடைந்தன.

14-9-85 அன்று மூதூரில் விடுதலைப் போராளிகளின் முகாமை இராணுவத்தினர் முற்றுகையிட்டதில் ஆகாய மார்க்கமாக வந்த ஹெலிகொப்டர் மீதான தாக்குதலில் ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது.

15-9-85 அன்று திருகோணமலையில் கிண்ணியாவில் நடைபெற்ற இராணுவ ரோந்துத் தொடர் மீதான தாக்குதலில் 15 இராணுவத்தினர் மாண்டனர். மூவர் படுகாயமடைந்தனர்.

---

## கிழக்கில்...

( 1ம் பக்க தொடர்ச்சி )

நன்கு பலப்படுத்தப்பட்டதம்மை, யாரும்முறியடித்துவிடமுடியாது என்ற இறுமாப்பில் தான்தோன்றித்தனமாக கொமாண்டோ பொலிசார் கிழக்கு மாகாண மக்களை கொன்று குவித்தும் அட்டூழியத்தனங்களில் ஈடுபட்டதை வேதனையை சொந்தமாகக் கொண்ட அப்பகுதி மக்கள் நன்குணர்வர்.

மட்டக்களப்பில் எம் மக்களின் துயர் துடைக்கவிடுதலைப் போராளிகள் எருவூர் பொலிஸ் நிலைய தாக்குதலை சவாலாக ஏற்று தாக்குதலை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் பொலிஸ் நிலையம் ரொக்கற் லோஞ்சர் நவீன தன்னியக்க துப்பாக்கிகள் உள்ள 50க்கு மேற்பட்ட விடுதலைப் போராளிகளின் அதிரடிப் பிரிவு ஒன்றினுல் சுற்றி வளைக்கப் பட்டது.

ஒலி பெருக்கி மூலம் "பொலிஸ் நிலையம் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது. உங்கள் உயிருக்கு பூரண உத்தரவாதமுண்டு சரணடைந்து விடுங்கள்" என்று போராளிகள் தரப்பில் அறிவிக்கப் பட்டது விடுதலைப் போராளிகளின் அறிவிப்பை செவி மடுக்க மறுத்து தம்மை முறியடித்து விட முடியாது என்ற இறுமாப்பில் கொமாண்டோ பொலிசார் தரப்பிலிருந்து தாக்குதல் ஆரம்பமானது.

விடுதலை போராளிகள் மிகத் தீரத்துடன் பொலிஸ் நிலையத்திலிருந்து வந்த தாக்குதலை சமாளித்தவாறே பொலிஸ் நிலையக் கட்டிடத்தை சுற்றி வெடி மருந்து கான்களை பொருத்தினர் மீண்டுமொரு தடவை "சரணடைந்து விடுங்கள். பொலிஸ் நிலையத்தை தகர்க்க போகிறோம்" என அறிவித்தனர்.

ஆனுல் கொமாண்டோ பொலிசார் போராளிகளின் அறிவுறுத்தலை மீறி தொடர்ந்தும் தாக்குதலில் இறங்கினர்.

தயாராகி வைக்கப்பட்ட கட்டிடத்தை சுற்றியிருந்த வெடி மருந்துகள் வெடிக்க வைக்கப் பட்டன.

அந்தோ! கட்டிடங்கள் அனைத்தும் தரைமட்டமாகின. கட்டிட இடிபாடுகளில் அனைத்து கொமாண்டோ பொலிசாரும் மாண்டனர். விடுதலைப் போராளிகள் சகல ஆயுதங்களையும் சேகரித்துக் கொண்டனர் வெளியே உயிர் பிழைக்க ஓடி வந்த ஒரு கொமாண்டோ பொலிசாரை விடுதலைப்போராளிகள் கைது செய்து மனித நேயத்துடனும் மனிதாபிமானத்துடனும் விடுதலை செய்தனர் விடுதலைப் போராளிகள் தரப்பில் எதுவித இழப்புமில்லாமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே யாழ்ப்பாண மன்னுர் பொலிஸ் நிலையத் தாக்குதலில் கைது செய்யப் பட்ட பல கொமாண்டோ பொலிசாரை விடுதலை போராளிகள் விடுதலை செய்தது அறிந்ததே.

எருவூர் பொலிஸ் நிலைய தாக்குதல் தமிழீழ மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையையும் தமிழீழத்தின் வெற்றியையும் உறுதியாக்கியுள்ளது. தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் விடுதலைப் போராளிகள் வேரூன்றியுள்ளதை யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மன்னுர், குச்சவெளி, எருவூர் பொலிஸ் நிலைய தாக்குதல்கள் உறுதியாக்கியுள்ளன,